# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2202/10 - 2020 නොවැම්බර් මස 18 වැනි බදාදා - 2020.11.18

*2202/10 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி. 94/47* (v)

***(269 ஆம் அத்தியாயமான)* நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம்**

*6 (2) (ஆ)* மற்றும் *21 (2) (ஆ)* என்னும் பிரிவுகளின் கீழான கட்டளை

*(269 ஆம் அத்தியாயமான)* நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் *6(2)(ஆ)* என்னும் பிரிவினாலும், *21(2)(ஆ)* என்னும் பிரிவினாலும் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளைமூலம்-

(அ) இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட "கொலவெனிகம ரஜமஹா விகாரை இடப்பரப்பு" என அழைக்கப்படும் இடப்பரப்பானது, மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்துக்காக, நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக இருத்தல் வேண்டுமென வெளிப்படுத்துகின்றேன் ; அத்துடன்

(ஆ) நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக மேலே வெளிப்படுத்தப்பட்ட "கொலவெனிகம ரஜமஹா விகாரை இடப்பரப்புக்கான" உருவரைப் பௌதீக வரைபடமொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனப் பணிக்கின்றேன்.

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.*

கொழும்பு,
*2020, நவெம்பர் 13.*


1A - G 33213 — 35 (2020/11)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

கொலவெனிகம ரஜமஹா விகாரை இடப்பரப்பைக் கொண்டுள்ள பிரதேசம்

தென் மாகாணத்தில் மாத்தறை மாவட்டத்திலுள்ள கொடபொல பிரதேச செயலாளர் பிரிவில் மொறவக் கோரளேயில் சிறு பிரிவுக்குட்பட்ட கொலவெனிகம கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் தலைமையதிபதியின் 2019, யூலை 8 ஆந் திகதியைக் கொண்ட சுவட்டு இல. MR/KTP/2019/382 இனால் காண்பிக்கப்படுகின்ற 2.2419 ஹெக்டேயர் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதும், பின்வருமாறான எல்லைகளைக் கொண்டுள்ளதுமான காணி இடப்பரப்பு :-

காணித்துண்டம் இல. ஏ :

வடக்கு : நெற்காணி மற்றும் ஜின் கங்கை ; ;

கிழக்கு : ஜின் கங்கை மற்றும் நெற்காணி ;

தெற்கு : நெற்காணி ;

மேற்கு : நெற்காணி மற்றும் வீதி (RDA).

11-33213/1

---

ச.வ.பி. 94/47 (v)

**(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம்**

6 (2) (ஆ) மற்றும் 21 (2) (ஆ) என்னும் பிரிவுகளின் கீழான கட்டளை

(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6(2)(ஆ) என்னும் பிரிவினாலும் 21(2)(ஆ) என்னும் பிரிவினாலும் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளைமூலம்-

(அ) இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட "பிங்கிரிய தேவகிரி ரஜமஹா விகாரை இடப்பரப்பு" என அழைக்கப்படும் இடப்பரப்பானது, மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்துக்காக, நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக இருத்தல் வேண்டுமென வெளிப்படுத்துகின்றேன் ; அத்துடன்

(ஆ) நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக இருப்பதற்கு மேலுள்ளவாறு வெளிப்படுத்தப்பட்ட "பிங்கிரிய தேவகிரி ரஜமஹா விகாரை இடப்பரப்புக்கான" உருவரைப் பௌதீக வரைபடமொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனப் பணிக்கின்றேன்.

**மஹிந்த ராஜபக்ஷ,**
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
2020, நவெம்பர் 13.

**அட்டவணை**

பிங்கிரிய தேவகிரி ரஜ மகா விகாரை இடப்பரப்பைக் கொண்டுள்ள பிரதேசம்

வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்திலுள்ள பிங்கிரிய பிரதேச செயலாளர் பிரிவில் கீனியம கோரளேயின் சிறு பிரிவுக்குட்பட்ட விஹாரகம கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் தலைமையதிபதியின் 2018, நவெம்பர் 12 ஆந் திகதியைக் கொண்ட

*சுவட்டு இல.* Ku/BNG/2018/474 *இனால் காண்பிக்கப்படுகின்ற 10.3958 ஹெக்டேயர் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதும், பின்வருமாறான எல்லைகளைக் கொண்டுள்ளதுமான காணி இடப்பரப்பு :-*

*காணித்துண்டம் இல. ஏ :*

*வடக்கு : பிங்கிரிய தேவகிரி ரஜ மகா விகாரையினால் உரிமை கோரப்படும் விஹாரகம ;*

*கிழக்கு : பிங்கிரிய தேவகிரி ரஜ மகா விகாரையினால் உரிமை கோரப்படும் விஹாரகம மற்றும் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் உரிமை கோரப்படும் விஹாரகம ;*

*தெற்கு : வீதி (பிரதேச சபை மற்றும் பிங்கிரிய தேவகிரி ரஜ மகா விகாரையினால் உரிமை கோரப்படும் விஹாரகம ;*

*மேற்கு : பிங்கிரிய தேவகிரி ரஜ மகா விகாரையினால் உரிமை கோரப்படும் விஹாரகம.*

*11-33213/2*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*